# 12

# உலகம் சிலுவையில்; நானும் சிலுவையில்!

"Crucified to the World"

### *முகவுரை*

- ''உலகம்'' என்ற பதம் புதிய ஏற்பாட்டில்
  பல்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

''உலகம்'' — கிரேக்க மொழியில் "kosmos"
= பூமி (புவி)
= மனுக்குலம்
= புறவினத்தார் (யூதரல்லாதோர்)
= தற்காலிக உடைமைகள்
= தேவனுக்கு எதிரான
இன்றைய மனுக்குலப்போக்கு

இக்கடைசி அர்த்தத்தையே ''உலகச் சிந்தை'' எனக் குறிப்பிடுகிறோம்.

- வசனப்பகுதி: பவுலின் சாட்சி (கலா 6:14)

அ) *உலகம் எனக்குச் சிலுவையிலறையப்பட்டிருக்கிறது.*
= உலகம் என்னை வஞ்சிக்க முடியாது.

ஆ) *உலகிற்கு நான் சிலுவையிலறையப்பட்டிருக்கிறேன்.*
= உலகுக்குப் பின்னால் நான் போகமாட்டேன்.

- கிறிஸ்தவர்க்கு இது விருப்பு-வெறுப்புப் பாடமல்ல;
  அடிப்படையான கட்டாயப் பாடம் —

☐ திருச்சபை பிறந்த நாளன்று துவக்கச் செய்தி
அப் 2:40 ... *இந்தப் பொல்லாத சந்ததி*

☐ கிறிஸ்தவத்தின் வரையறை
யாக் 1:27 ... *உலகத்தால் கறைபடாது காத்துக்கொள்ளல்*

☐ படைப்பில் முதல் செயல்
ஆதி 1:3,4 ... *இருளிலிருந்து ஒளியைப் பிரித்தார்*

☐ வேதத்தின் மிக நீண்ட புத்தகத்தின் முதல் வசனம்
சங் 1:1 ... *துன்மார்க்கர் ... பரிகசிப்போர் ...*



### *உலகச் சிந்தையின் வெளிப்பாடுகள்*

### *1. தீயவரோடு சகவாசம்* (Fellowship with the wicked)

2 கொரி 6:14-18 ... *ஐக்கியமேது? ... ? ... ? ... ? ... ?*

இயேசு *''பாவிகளின் சிநேகிதர்''* அல்லவா?
ஆனாலும் அவர் *''பாவிகளுக்கு விலகினவர்''* தெரியுமா?—
எபி 7:26

அவர்களிடமிருந்து அவர் கற்கவில்லை;
அவரிடமிருந்து அவர்கள் கற்றனர்!
சங் 1:1

எ.கா.) அவர்களது அசுத்த நகைச்சுவை உங்களுக்குப் பிடிக்காது.
*''ஆகாத உரையாடல் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்''*
(1 கொரி 15:33)

### *2. உலகின் தீய விருப்பங்கள்* (Lust of the world)

கலா 5:24 (வச 19-21 இல் ஒரு பட்டியலுண்டு.)
இப்பாவங்களை ஒவ்வொன்றாய் அறிக்கையிடுங்கள்.
அவற்றை மேற்கொள்ள முடிந்ததெல்லாம் செய்யுங்கள்.
விட்டுக்கொடுக்கும்போதெல்லாம் உங்கள் பலம் குறைகிறது;
''மாட்டேன்'' என்பதோ ஆன்மீகத் தசைகளுக்கு வலுவூட்டும்.

அப்போஸ்தலன் பவுலின் அறிக்கை:
*மனதுக்கும் உடலுக்கும் போராட்டம்* (ரோ 7:21-25)

90 வயது பிரசங்கியாரிடம் ''இவ்விதச் சோதனைகள்
எப்பொழுது நிற்கும்?'' என்று வினவிய இளைஞனுக்குப் பதில்:
''அந்த வயது எனக்கு வரும்போது சொல்கிறேன்!''

இறைவாக்குகளை உரிமை பாராட்டுங்கள் —
2 பேது 1:4 ... *உலகக் கேடு ... திவ்விய சுபாவம்*

### *3. உலகப் பொருட்கள்* (Things of the world)

1 யோ 2:15 ... இது பொருள் மோகம் பிடித்த சமூகம்.

உங்கள் **''மனதை''** உன்னதக் காரியங்களில் பதியுங்கள் —
கொலோ 3:1-3 ... *கிறிஸ்துவுடன் மரித்தீர்கள் ... எழுந்தீர்கள்*

*''மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவனுக்கு வாழ்வு வந்துவிடாது''* —
லூக் 12:15

இதைத் தொடர்ந்து வரும் உவமை —

*''வயல் ... விளைச்சல் ... களஞ்சியம் ... அநேக ஆண்டுகள்''*
*''மதிகேடனே! தேவனிடம் செல்வந்தனாயிராதவன்!''*
(வச 21)

அதாவது, இறையரசில் கரிசனையின்மை (வச 31)

அளவுக்குமீறிப் பிள்ளைகளுக்குப் பொருள் விட்டுச் செல்லாதீர் —
*''விற்று ... தரித்திரருக்குக் கொடுத்து ... பரலோகில் பொக்கிஷம் ... உங்கள் பொக்கிஷம் எங்கேயோ''* ... (வச 33,34)

விரித்த கரங்கள், திறந்த விரல்கள் — இதுதானே கல்வாரி?
தேமாவாயிராதிருங்கள் (2 தீமோ 4:10)

## *4. உலக நாகரிகம்/போக்கு* (Trends / fashions of the world)

எபே 2:1,2,3 ... *இவ்வுலக வழக்கம் ...*
ரோ 12:2 ... *இவ்வுலகப் போக்கு ... மறுரூபம் ...*

எ.கா.) உடை — இன்றையப் போக்கு யாது?
முடிந்த அளவு வெளிக்காட்டுங்கள்.
கவர்ச்சி மட்டுமல்ல, உணர்ச்சிகளைத் தூண்ட.

எவ்வளவு குட்டையாய், நீளமாய், இறுக்கமாய், திறப்பாய் இருக்கலாமென்றெல்லாம் கேட்காதீர்.

ஆடவர் : உங்கள் உடையில் ஆண்மைத் தோற்றம் வேண்டும்.
பெண்டிர் : உங்கள் உடையில் பெண்மைத் தோற்றம் வேண்டும்.

மதிப்பான பண்புகளை விற்றுப்போடாதீர்.
சமரசம்பண்ண மறுத்தால் பகைக்கப்படுவீர் (யோ 7:7)

கண்ணியம், ஒழுக்கம் ஆகிய இரண்டிலும் இன்று சரிவுதான்.
— பிசாசு இதைப் படிப்படியாய்ச் செய்வான்:
எ.கா.) நீரில் தவளை; கொஞ்சம் கொஞ்சமாய்ச் சூடேற்றல்
— விவாதம்: எல்லாருந்தான் செய்கிறார்களே!
பதில்: ''மற்றவர் செய்யலாம்; நான் செய்யக்கூடாது!''



## *5. உலகச் சிற்றின்பங்கள்* (Pleasures of this world)

நாம் மகிழ்ந்திருப்பது தேவ சித்தம் —
அதற்குச் சூத்திரம்: பாக்கிய வசனங்கள் (மத் 5:2-11)
1 கொரி 7:29-31 ... எதுவும் அளவுக்கு மீறக்கூடாது.

அளவுக்கு மீறுவது இயல்பைத் தகர்க்கும்.

நோவா காலத்தில் நடந்தது அதுதான் (மத் 24:37,38).
இன்றும் அதுவே நடக்கும்.

## *6. பிரபலம் நாட்டம்* (Popularly in this world)

யோ 17 — பிரதான ஆசாரிய ஜெபம் ...
*உலகத்தால் பகைக்கப்படுவீர்* (வச 14,15,16)

பிரபலம் நாடுவோர் விரைவில் விசுவாசம் இழப்பர் —
யோ 5:44 ... *எப்படி விசுவாசிப்பீர்கள்?*

*''உனக்குப் பெரிய காரியங்களைத் தேடாதே''* (எரே 45:5)
பேர்ப்புகழ் நாட்டம் நமக்கு நாமே விரிக்கும் வலை!

இவ்வுலகிற்கு நண்பன் VS. இறைவனுக்குப் பகைவன்

யாக் 4:4 ... *தேவனுக்குப் பகைவன்*
:5 ... *ஆவியானவரின் வைராக்கிய வாஞ்சை*
:6 ... *தாழ்மை ... கிருபை ... பெருமை*

| | |
|---|---|
| இனப் பெருமை | (Race) |
| நிறப் பெருமை | (Face) |
| உடைப் பெருமை | (Lace) |
| இடப் பெருமை | (Place) |
| சொத்துப் பெருமை | (Space) |

## *முடிவுரை*

சிலுவையிலறையப்படுவதற்குச் சற்று முன்னர்,
இயேசு சொன்னது: யோ 14:30, *இவ்வுலகின் அதிபதி வருகிறான்; அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை!*

நம்மால் இப்படிச் சொல்லமுடியுமா?